பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

21 02 2025 **FRIDAY** 6 30 **PM**

வணக்கம் - மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. உலக வளர்ச்சிக்கான உந்து சக்தியாக இந்தியா திகழ்கிறது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

2. நடப்பு பருவத்தில் கோதுமை உற்பத்தி புதிய உச்சத்தை எட்டும் என்று மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ்சிங் சௌஹான் கூறியுள்ளார்.

3. தமிழகத்தில் பள்ளி இடைநிற்றலை தடுப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

4. தமிழக மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு, கல்வி தொடர்பான விவகாரங்களில் அரசியல் செய்வதை திமுக அரசு தவிர்க்க வேண்டும் என்று பிஜேபி வலியுறுத்தியுள்ளது.

5. ஆசிய கோப்பை வில்வித்தை போட்டியில் இந்தியா, ஆடவர் மற்றும் கலப்புக்குழுப் பிரிவில் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

<<<<<<<>>>>>>>

உலக வளர்ச்சிக்கான உந்து சக்தியாக இந்தியா திகழ்கிறது என்று மத்திய தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

இன்று கொச்சியில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

மத்திய மாநில அரசுகள் இணைந்து செயல்படுவதன் காரணமாக, நாட்டின் வளர்ச்சி சீராக உள்ளது என்று அவர் கூறினார்.

மாநிலங்கள் வளர்ச்சியடைந்தால் மட்டுமே நாடு வளர்ச்சியடைய முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

முதலீடுகளை ஈர்ப்பதில் மாநிலங்களுக்கு இடையே ஆரோக்கியமான போட்டி நடைபெறுவது வரவேற்கத்தக்கது என்றும் திரு. பியூஷ் கோயல் கூறினார்.

<<<<<<<>>>>>>>

கோதுமை உற்பத்தி, நடப்பு பருவத்தில் புதிய உச்சத்தை எட்டும் என்று வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ்சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த நிதியாண்டில் 1,133 லட்சம் டன் கோதுமை உற்பத்தி செய்யப்பட்டதாக குறிப்பிட்டார்.

நடப்பு பருவத்தில் இது மேலும் அதிகரிக்கும் என்று அவர் கூறினார்.

விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ், இதுவரை 3 லட்சத்து 46 ஆயிரம் கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளதாக திரு. சிவராஜ்சிங் சௌஹான் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

தமிழகத்தில் பள்ளி இடைநிற்றலை தடுப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மாநில அரசு மேற்கொண்டு வருவதாக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி கூறியுள்ளார்.

இன்று திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேசிய கல்விக் கொள்கையை தமிழக அரசு ஏற்காததற்கு 12 காரணங்கள் உள்ளதாக கூறி அவற்றை பட்டியலிட்டார்.

<<<<<<<>>>>>>>

தேசிய கல்விக் கொள்கையில் ஏற்கமுடியாத அம்சங்களை, பொதுவெளியில் விவாதங்கள் செய்வதை தவிர்த்து, மத்திய அரசுடன் தமிழக அரசு ஆலோசனை மேற்கொண்டு நல்ல முடிவுகளை எடுக்க வேண்டுமென்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கல்வித்துறையில் தமிழகத்திற்கான நிதியை எவ்வித நிபந்தனையும் இன்றி விடுவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

<<<<<<<>>>>>>>

தமிழக மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு, கல்வி தொடர்பான விவகாரங்களில் அரசியல் செய்வதை திமுக அரசு தவிர்க்க வேண்டும் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

சமூகவலைதளத்தில் விடுத்துள்ள அறிக்கையில் இதனை தெரிவித்துள்ள அவர், பிஎம்-ஸ்ரீ திட்டத்தில் தமிழக அரசு இணைய வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழகம் முழுவதும் அரசு பள்ளி மாணவர்களிடையே கருத்துக் கணிப்பு மேற்கொண்டு, எந்தமொழியை கற்க மாணவர்கள் ஆர்வம் காட்டுகிறார்கள் என்பதை முடிவு செய்ய வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

இதன் அடிப்படையில் மொழி ஆசிரியர்களை நியமிப்பதற்கான பணிகளை திமுக அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு. அண்ணாமலை அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>>>

தமிழகத்தில் உள்ள அரசு பள்ளிகளில் காலியாக உள்ள பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு திமுக அரசு இதுவரை

நியமன ஆணைகளை வழங்காதது ஏன் என்று பாமக தலைவர் திரு. அன்புமணி ராமதாஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சான்றிதழ் சரிபார்ப்பு உள்ளிட்ட பணிகள் நிறைவடைந்த பின்னரும் பணியாணை வழங்காமல் இருப்பது கண்டிக்கத்தக்கது என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆசிரியர் பணியிடங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் நலனை கருத்தில் கொண்டு பணிநியமன ஆணைகளை திமுக அரசு உடனடியாக வழங்க வேண்டும் என்றும் திரு. அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<<>>>>>>>

கோவையில் உள்ள ஈசா யோகா மையத்தில் மகாசிவராத்திரி நிகழ்ச்சிகள் விதிகளுக்கு உட்பட்டு நடத்தப்படுகிறதா என்பது குறித்து ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்யுமாறு சென்னை உயர்நீதிமன்றம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக மனுவினை விசாரணை செய்த நீதிபதிகள் திரு. எஸ்.எம். சுப்பிரமணியம், திரு. ராஜசேகர் அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் ஆய்வறிக்கை 24ஆம் தேதிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வழக்கின் விசாரணையும் அன்றைய தினத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>>

உலக தாய்மொழி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, நாடுமுழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ் மொழியின் சிறப்பினை பாதுகாப்பதில் தமிழர்களுக்கு நிகர் வேறு யாரும் இருக்க முடியாது என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - விஜயகுமார் 45 செகண்ட்ஸ்)

அரசு ஆரம்பப் பள்ளிகளில் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு பாடல்கள் மூலமாக தமிழ் கற்பிக்கப்படுவதாக சேலம் நகர தொடக்கப்பள்ளி ஆசிரியை நித்யா எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - நித்யா 41 செகண்ட்ஸ்)

<<<<<<<>>>>>>>

சென்னை - ஜம்மு காஷ்மீர் இடையேயான நேரடி விமான சேவையை ஏர் இந்தியா நிறுவனம் தொடங்கியுள்ளது.

இதன் காரணமாக பயணிகள் மகிழ்ச்சியடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - சுரேகா 38 செகண்ட்ஸ்)

<<<<<<<>>>>>>>

மாவட்டச் செய்திகள்

பெரம்பலூர் மாவட்டத்தில் காவல்துறை கண்காணிப்பாளர் திரு. **Adarsh Pachera** தலைமையில் தாய்மொழி தின உறுதிமொழியை காவல்துறையினர் இன்று ஏற்றுக் கொண்டனர்.

<<<<<<<>>>>>>>

திருப்பூர் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நாடகம் இன்று நடத்தப்பட்டது.

<<<<<<<>>>>>>>

திருப்பத்தூர் மாவட்டத்தில் விவசாயிகளின் கோரிக்கைகள் குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று ஆட்சியர் திருமதி. சிவ சௌந்தரவல்லி கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>>

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகராட்சியில் உள்ள அரசு மருத்துவமனையில் மருத்துவத்துறை உதவி துணை இயக்குநர் டாக்டர் கண்ணகி இன்று ஆய்வு மேற்கொண்டார்.

<<<<<<<>>>>>>>

மதுரையில் போதைப்பொருள் இல்லா தமிழகம் குறித்த விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திருமதி. சங்கீதா இன்று தொடங்கி வைத்தார்.

<<<<<<<>>>>>>>

வேலூர் அருகே, காரில் கடத்திச் செல்லப்பட்ட 10 லட்சம் ரூபாய் மதிப்பிலான செம்மரக்கட்டைகளை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

<<<<<<<>>>>>>>

நாமக்கல் மாவட்டத்தில் காவல்துறை சார்பில் மகளிர் காவலர்களுக்கு வளைகாப்பு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

<<<<<<<>>>>>>>

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய கோப்பை வில்வித்தை போட்டியில் இந்தியா, ஆடவர் குழுப் பிரிவில் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

பாங்காக்கில் நடைபெற்று வரும் இப்போட்டியின் கலப்புக் குழுப் பிரிவிலும் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

<<<<<<<>>>>>>>

சிட்னியில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் சவ்ரவ் கோஷல் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதியாட்டத்தில் அவர் 11-6, 11-6, 11-5 என்ற செட்கணக்கில் தென்கொரியாவின் **Minwoo Lee-**யை வென்றார்.

<<<<<<<>>>>>>>

சிங்கப்பூரில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Unnathi Hooda** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் 21-19. 21-15 என்ற செட்கணக்கில் ஆஸ்திரேலியாவின் **Saena Kawakami**–யை வென்றார்.

<<<<<<<>>>>>>>

துருக்கியில் நடைபெற்ற சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியா வெள்ளிப்பதக்கம் வென்றது.

கலப்பு இரட்டையர் பிரிவில் **Akash Pal - Poymantee Baisya** இணை இப்பதக்கத்தை கைப்பற்றியது.

<<<<<<<>>>>>>>

மொனாக்கோ சர்வதேச மகளிர் செஸ் போட்டியின் மூன்றாவது சுற்று முடிவில் இந்தியாவின் **Koneru Humpy** முதலிடத்தில் உள்ளார்.

<<<<<<<>>>>>>>

புனே சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் – விஜய் சுந்தர் பிரசாந்த் இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

<<<<<<<>>>>>>>

அர்ஜென்டினா மற்றும் பெருவில் நடைபெறவுள்ள உலக கோப்பை துப்பாக்கிச் சுடும் போட்டியில் பங்கேற்பதற்கான 35 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<END>>>>>>>